**Spl.SC.No. 12/2020** Dated:. 11.12.2024

( 1.2.3,5 முதல் 8 எதிரிகள் ஆஜர். 4 ஆவது எதிரி ஆஜர் இல்லை. )

அ.சா.1 **வைரவகேசு**

**அ.சா. 1 மனுவின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டு முன்விசாரணை செய்யப்பட்டபின் தற்போது 3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்:**

எதிரிகள் மணல் கடத்த கூடிய நபர்கள் என்று நான் எதிரிகளை பற்றி என் விசாரணையில் கூறவில்லை. தேவிப்பட்டிணத்தில் என்மீது மணல் கடத்தியதாக வழக்கு பதிவாகியுள்ளதா என்றால் இல்லை. எனது பெயர் வைரவ கேசு, தகப்பனார் பெயர் காளியப்பன். வடக்கு தெரு தேவிப்பட்டிணம்தான் என் முகவரி என்றால் சரிதான். குற்ற எண். 48/2018 ல் தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் மணல் கடத்தியதாக வழக்கு பதிவில் உள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரை எழுதியது யார் என்றால் நான்தான் எழுதினேன். இந்த புகாரை எழுதும்போது சம்பவத்தை ஆதிமூலம், முனியாண்டி, காளிதாஸ் ஆகியோர் நேரில் பார்த்த விவரம் எனக்கு தெரியும். புகாரில் கண்ட விவரங்களை படித்து பார்த்தேன். ஆனால் புகாரில் மேற்படி ஆதிமூலம், முனியாண்டி, காளிதாஸ் ஆகியோர் சம்பவத்தை நேரில் பார்த்ததாக குறிப்பிடவில்லை. இந்த சம்பவத்தை குறித்து என்னிடம் கல்யாணகுமார் என்பவர் சொல்லியதாகதான் புகாரில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கல்யாணகுமார் இவ்வாறான சம்பவத்தை இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அளித்துள்ளார். புகாரில் சம்பவ இடத்திலிருந்து என்மகனை மருத்துவமனைக்கு நான் அனுப்பியதாக இல்லை என்றால் சரிதான். புகாரை காவல் நிலையத்தில் சம்பவத்திற்கு மறுநாள் மதியம் 1.30 மணியளவில்தான் நான் காவல்நிலையத்தில் கொடுத்தேன். ஒன்றரை

மணிக்கு 01.03.2020ல் நான் புகார் கொடுப்பதற்கு முன்பே என் மகன் இறப்பு குறித்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனை முன்பு மறியலில் ஈடுப்பட்டேன் என்றால் சரிதான். அந்த மறியலின் போது இராமநாதபுரம் காவல் அதிகாரிகள் பலர் வந்திருந்தனர். அவ்வாறு மறியல் செய்யும்போது காலை 10 மணியிருக்கும். என் மகன் பயன்படுத்தியதாக சொல்லப்பட்ட செல்போன் எங்கிருந்தது என்றால் கல்யாணகுமார் வசமிருந்து சம்பவத்திற்கு இரண்டு நாள் கழித்து கல்யாணகுமார் என்னிடம் ஒப்படைத்தார். போலீசார் விசாரணையின்போது நான் கல்யாணகுமாரிடம் இருந்து என் மகனின் செல்போனை பெற்றுகொண்டேன் என்று வாக்குமூலம் அளித்தேன் என்று சொன்னால் சரிதான். 23.03.2020 ல் நான் கல்யாணகுமாரிடம் செல்போனை பெற்றபின் அது யார் பயன்பாட்டில் இருந்தது என்றால் யாரும் அந்த செல்போனை பயன்படுத்தவில்லை. மேற்படி செல்போனை யார் கடைசியாக என் மகனிடம் பேசினார் என்பதை குறித்து விசாரணைக்காக காவல்துறையில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. சாட்சி சான்றாவணம் 1 முதல் 4 தாக்கல் செய்துள்ளேன். அந்த செல்போனில் உள்ள விவரங்களை எடுக்க என்னை இந்த வழக்கில் குறுக்கு விசாரணை செய்தபின்பு தான் எடுத்து பார்த்தேன். செல்போன் விவரங்களை எடுத்து 3 வருடங்கள் இருக்கும். அந்த 3 வருடமும் அந்த செல்போன் விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் நீதிமன்றத்தில் என்னை மனுவின் அடிப்படையில் ஆஜர்படுத்த வழக்கறிஞர் கூறியதால் மனு தாக்கல் செய்து 01.08.2024 ல் குறியிட செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை 1 முதல் 4 ஆவணங்களை தாக்கல் செய்ய எப்போது முயற்சி எடுத்தீர்கள் என்றால் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியிடம் மேற்படி ஆவணங்களை கொடுத்தபோது வழக்கு விசாரணையின்போது தாக்கல் செய்யலாம் என்று

கூறிவிட்டதாக சாட்சியம் அளிக்கிறார். சா.பொ.1 முதுல் 4, நான்கு வருடங்களாக என் கைவசம் இருந்தது. என்னிடம் காட்டபடும் மனுவில் சேதுபதி என் மகனுக்கு போன் செய்தது சம்மந்தமான Call register and Call Voice records எனக்கு தற்போது தான் கிடைக்கபெற்றுள்ளது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் நான் தாக்கல் செய்துள்ள கு.வி.மு.ச 313 மனுவிலும் மேற்கண்ட விவரத்தைதான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:–** இல்லை

Taken down to my dictation, in my presence
and hearing and under my personal direction
and superintendence and interpreted to the witness
in the presence of the accused and admitted to the
witness to be correct.

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)